மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 68/2021

பெயர் – ராஜாராம் (வா.சா.1)

நாள் – 11.08.2023

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.தொடர்ச்சி

எனது தகப்பனார் இறக்கும்வரை சுயநினைவோடுதான் இருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும்வரை சுயநினைவோடுதான் இருந்தார் என்றாலும் அதை தெரிந்துகொண்டே நான் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் 1வது அயிட்ட சொத்து தானசெட்டில்மெண்ட் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தபசில் 1வது அயிட்ட சொத்தை பொருத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துதான் 1வது அயிட்ட சொத்து என்றால் சரியல்ல. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தும் 1வது அயிட்ட சொத்தும் எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தில் கண்டுள்ள 13வது அயிட்ட சொத்தும் ஒரே சொத்துதான் என்றால் சரிதான். எனது தகப்பனார் 12.3.2020ம் தேதி 1ம் பிரதிவாதியான ராஜம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் 2வது பக்கத்தில் இந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் நன்றாக சிந்தித்தும், ஆலோசனை செய்தும், பிறர் தூண்டுதல் இல்லாமலும், சுயநினைவுடனும், சுய அறிவுடனும் எழுதிக்கொடுக்கிறேன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனவே அந்த ஆவணப்படி எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் பிறப்பித்த தேதியில் சுயநினைவோடுதான் இருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எப்போதில் இருந்து உடல்நிலை சரியில்லாமல் போனது என்றால் 2019ம் ஆண்டிலிருந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எனது தகப்பனார் 2019ம் ஆண்டிலிருந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று எனது பிராதில் சொல்லியுள்ளளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தகப்பனாருக்கு உடல் நிலை மட்டும் தான் சரியில்லை என்றாலும் அவரது மனநிலை சரியாகத்தான் இருந்தது என்றால் ச ரியல்ல. எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த காலத்தில் எனது தகப்பனாரை 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் அவரை பராமரித்துவந்தார்கள்

என்றால்சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இரந்த காலம் வரை சுயநினைவோடுதான் இருந்தார்என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 1வது அயிட்ட சொத்தை தற்போதுவரை 1ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போதுவரை 1ம் பிரதிவாதிதான் 1ம் அயிட்ட சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் அந்த விவரத்தை தெரிந்து கொண்டே நான் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2010ம் ஆண்டு எனக்கு எழுதிக்கொடுத்த உயில்ஆவணமான வா.சா.ஆ.12 ஆவணத்தில் யாரெல்லாம் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.12 ஆவணத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறிப்பிட்டள்ளது எனக்கு தெரியாது என்றால் தெரியும். 13 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளது. அந்த 13 அயிட்ட சொத்துக்களும் அதை தவிர வேறு சொத்துக்களும் எனது தகப்பனாருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் படிக்கவில்லை. நான் எந்த ஆண்டு, வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் 2020ம் ஆண்டு அனுப்பினேன். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குதான் 2020ம் ஆண்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பை யார் பெற்றுக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 16.2.2020ல் அனுப்பினேன். 17.2020ம் தேதி எனது அப்பா பூல்ராஜ் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டார். 18.2.2020ம் தேதி 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் பூல்ராஜ் என்ற பெயரில் கையொப்பமிட்டு வாங்கிகொண்டனர். எனது தகப்பனாரின் ஈமகிரிகையை 1ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் அவர்கள் சுந்தரகுடும்பன்பட்டியில் ஈமகிரிகை செய்தார்கள். நாங்கள் திருநெல்வேலி தாமிரபரணியில் வைத்து ஈமகிரிகை செய்தோம். எனது தகப்பனாரின் ஈமகிரிகையை 1ம் பிரதிவாதிதான் எனது தகப்பனாரின் மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்து ஈமகிரிகை செய்தார் என்றால் சரியல்ல. எனது அம்மாவும், ராஜம்மாவும் சேர்ந்துதான் செய்தார்கள். இந்த வழக்கில் நான் ஜாதி சான்றிதழ் மற்றும் இருப்பிடமாக தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். எனது தகப்பனாரின் ஈமகிரிகையை 1ம் பிரதிவாதி ராஜம்மாள்தான் செய்தார் என்றால் சரியல்ல. ஈமகிரிகைக்கு என ஊராட்சி மன்றத்தில் இருந்து கொடுத்த தொகையை அவர் பெற்றுக்கொண்டார். அதைதான் சாட்சியாக காண்பிக்கிறார்கள். எனது தகப்பனார் இறந்த மறுநாளிலேயே இறப்புசான்றிதழ் வேண்டி மனு கொடுத்துவிட்டார்க்ள. ஆனால் ஈமகிரிகை எனது அம்மாவும் சேர்ந்து தான் செய்தார். எனது தாயார் காளியம்மாள் சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்ற காரணத்தினால்தான் ஈமகிரிகைக்கான ஊராட்சி மன்றத்தில் வழங்கிய தொகையை 1ம் பிரதிவாதி எனது தகப்பனாரின் மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்து பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. ஈமகிரிகைக்கான செலவுகளை நான் செலவு செய்தேன். ஆனால் அந்த தொகையை மட்டும் 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார். அது எப்படி சரியாகும். எனது தாயார் காளியம்மாள்எனது தகப்பனாரின் சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்ற காரணத்தினால்தான் அப்போது எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றாலும் எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களால் சண்டை போட முடியாமல்தான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. கல்லூரி காலத்தில் எனது தாயாரின் பெயர் ராஜம்மாள் என்று தான் சான்றிதழ்கள் உள்ளது என்பதால்தான் அந்த சான்றிதழ்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பள்ளி மற்றும் கல்லூரி சான்றிதழிலில் எனது தாயாரின் பெயர் ராஜம்மாள் என்று குறிப்பிட்டுள்ளதால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. எனது சிறுவயதில் வேண்டுமானால் தெரியாமல் அவ்வாறு நடந்திருக்கலாம். ராஜம்மாளை நான் அக்கா என்று தான் அழைப்பேன். எனது தாயாருடன் எனது சிறுவயதில் எங்கு குடியிருந்து வந்தேன் என்றால் சிறுவயதில் எனது சித்தப்பா, பெரியப்பாவுடன், எனது பாட்டி தலைமையில் கூட்டு குடும்பமாக சுந்தரகுடும்பன்பட்டியில் குடியிருந்து வந்தோம். 2010 ஆண்டு எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.12 ஆவணமான உயிலில் கண்டுள்ள எனது தகப்பனாரின் கையொப்பத்திற்கும் வா.சா.ஆ.7 ஆவணமான அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள எனது தகப்பனாரின் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். ஏற்கனே எனது தகப்பனார் வயது முதிர்வின் காரணமாக கையெழுத்துபோட முடியாது என்று சொல்லியுள்ளார். அப்போது முடியாது என்று

சொன்னல் அஞ்சலக ஒப்புகை அட்டையில் எவ்வாறு கையொப்பம் செய்வார். எனது தகப்பனார் கையொப்பம் செய்யமுடியாது தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கைரேகை வைத்தார் என்றால் சரிதான். 2.11.2010ம் தேதியில் எனது தகப்பனார் எனக்கு எழுதிவைத்து உயில் ஆவணத்திற்கு பின்னிட்டு இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான ராஜம்மாளுக்கு 12.3.2020ம் தேதி தபசில் ஏ அட்டவனை சொத்திற்கு தானாசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் தபசில் ஏ அட்டவனை சொத்தை பொறுத்து 12.3.2020ம் தேதி ராஜம்மாளுக்கு பிறப்பித்து கொடுத்த தானாசெட்டிலபமெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. அந்த தானாசெட்டிலமெண்ட் ஆவணத்தை எனது தகப்பனார் சுயநினைவோடு எழுதிக்கொடுத்ததால் அந்த ஆவணம் சட்டப்படியாக செல்லதகுந்த ஆவணம் என்றாலும் நான் வழக்கிற்காக எனது தகப்பனார் சுயநினைவோடு இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் ஏ அட்டவனை சொத்தை பொறுத்து 1வது பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள நிலையில் அந்த சொத்தை நான் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும்போது மனநிலை சரியில்லாமல் இருந்ததாக சொல்லியிருந்த நிலையில் அது சம்பந்தமாக ஆவணங்கள் எதையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்ாறல் எனது தகப்பனாருக்கு மனநலம் சரியில்லாமலும் முடக்குவாதமும் இடதுகால் முறிவும் ஏற்பட்டு இருந்தது. எனது தகப்பனார் இறக்கும்போது மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை நிருபணம் செய்வதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தபசில் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற உள்நோகத்தோடு எனது தகப்பனாரின் வயோகத்தை பயன்படுத்தி தனது பெயருக்கு மாற்றம் செய்யவேண்டும் என்று பிரதிவாதிகள் நிர்பந்தம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் 2வது சொத்தை 2ம் பிரதிவாதி பெயரில் எழுதினார்கள். ஏற்கனவே எனது தகப்பனாரின் மனநிலை மற்றும் உடல்நிலை குறித்து நாளிதழ்களிலும் கொடுத்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எனண்ணம் இரந்ததில்லை என்றாலும் எனது தகப்பனார்தான் அவரது விருப்பத்தின் பேரில் தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு

தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆன நாளிதழில் கண்டுள்ள சுயநினைவின்றி மாறி மாறி எனது தகப்பனார் பேசி வருவதாகவும் அதனால் சொத்துக்களை பொறுத்து யாருக்கும் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்நிலையில் அந்த நாளிதழ் பின்னிட்டு எனது தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு பிறப்பித்து கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து மாவட்ட பதிவாளரிடம் ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அந்த ஆட்சேபனைக்கான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட பதிவாளர் தானசெட்டில்மெண்டில் உள்ள சொத்து எனது தகப்பனாரின் சுயார்ஜிதமான சொத்து என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு சொன்னார். நான் சொல்லியுள்ளதுபோல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படியான ஆவணம் என்பதால் எனது தகப்பனார் உயிரோடு இரந்தபோது எந்தவித ஆட்சேபனையும் செய்யாமல் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு எனது தந்தையை ஆட்டோவில்தான் கூட்டிவந்தார்கள். எனது தகப்பனாரின் வயோதிகத்தினால்தான் பிரதிவாதிகள் அவரை பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு ஆட்டோவில் அழைத்துவந்தார்கள் என்றாலும் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் எந்த செயலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் 2ம் அயிட்ட சொத்து 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 2மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளார். அப்படி இருக்கும் போது எனது தகப்பனார் சுயநினைவு இல்லாது இருந்தபோது தானசெட்டில்மெண்ட் எழுதியுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகளான ராஜம்மாள், ராமுத்தாய் ஆகியோர் எனது தகப்பனார் சுயநினைவு இல்லாதபோது ஆட்டோவில் தூக்கி வந்து பத்திரபதிவு அலுவலகத்தில் வேலை பார்க்கும் அவர்களது உறவினர் பெண் ஒருவரை வைத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.12 ஆவணமான உயிலில் தபசில் 2வது அயிட்ட சொத்து எத்தனையாவது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 13 வது அயிட்ட சொத்தாக

காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் சர்வே எண்.350/10 ஆகும். வா.சா.ஆ.12 ஆவணத்தில் எனக்கு ஆயுளுக்குள் இந்த உயிலை மாற்றுவதற்கும் ரத்து செய்வதற்கும் உரிமை உண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் அந்த உயிலுக்கு பின்னிட்ட தானசெட்டில்மெண்ட் சட்டப்படி சரியான ஆவணம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சுயநினைவு இல்லாதபோது அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சுயநினைவோடு எழுதிக்கொடுத்ததாக தான் என் தகப்பனார் கைரேகை செய்துள்ளார் என்றால் அவ்வாறு கைரேகை வாங்கியுள்ளார்கள். தபசில் 2வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது தகப்பனார் எனக்கு எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை என்றாலும் தபசில் 2வது அயிட்ட சொத்துக்கும் உயிலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமான தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் 3ம் பக்கத்தில் மேற்படி 3வது நபரின் வயோதிகத்தின் காரணத்தினால் கையெழுத்து செய்யமுடியாமல் கைரேகை வைத்துள்ளதாக உள்ளது என்றால்சரிதான். அது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு அந்த அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையெழுத்து வாங்கியுள்ளார்கள். 2,3 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து பூல்ராஜ் என்று கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் யார் யாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் முதலில் பத்திரபதிவு அலுவகத்திற்கும், எனது அப்பா, 1,2,3 பிரதிவாதிகளுக்கும் அனுப்பினேன். எனது தந்தை இறக்கும் போது எங்கே இருந்தார் என்றால் சுந்தரகுடும்பன்பட்டியியில் இறந்தார். நான் ஆசிரியராக எப்போது வேலைக்கு சென்றேன் என்றால் 1999 வருடம் சுயநிதி பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். நான் ஆசிரியராக பணியில் சேர்ந்த பிறகு எங்கு இருந்தேன் என்றால் முதலில் நடுவப்பட்டி பள்ளியில் வேலை பார்க்கும் போது சுந்தரகுடும்பன்பட்டியில் இருந்தேன். எனக்கு திருமணம் ஆகி சாத்தூர் சாமியார் காலனியில் வசித்து வந்தேன். தற்போது திருத்தங்கலில் வசித்து வருகிறேன். எனது சகோதரிகள் திருமணத்திற்கு பின்பு எங்கு இருக்கிறார்கள் என்றால் எனது மூத்த சகோதரியை வன்னிமடை கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்து அங்கேயே வசித்து வருகிறார். , 2வது சகோதரி தானே விருப்பப்பட்டு சுந்தரகுடும்பன்பட்டியில் உள்ளவரை திருமணம் செய்து தற்போது சாத்தூரில் வசித்து வருகிறார். எனது சகோதரிகள் எங்கு வசித்து வருகிறார் என்ற

விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை சுந்தரகுடும்பன்பட்டியில் உள்ள ஒரே விலாசத்தில் தான் அதில் கண்டுள்ள நான்கு ஆள்களுக்கும் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். ஏனெனில் எனது அப்பாவிற்கு உடல்நிலைசரியில்லாமல் இருந்த காரணத்தினால் நான்கு பேர்களும் அங்கு இருந்தார்கள். எனது அப்பாவின் இறப்பிற்கு பின்னிட்டு 2 வது சகோதரி சாத்தூருக்கு வந்துவிட்டார். மூத்த சகோதரி சுந்தரகுடும்பன்பட்டியிலேயே தான் குடும்பத்துடன் வசித்து வருகிறார். எனது தந்தை இறக்கும் போது பிரதிவாதிகள் மூன்று பேரும் எனது தந்தையுடன் தான் இருந்தார்கள் என்றால் அவர் இறப்பின் போது இல்லை. ஆனால் உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது அவர்கள் உடன் இருந்தார்கள். உடல் நிலை சரியில்லாத எனது தந்தையை மூன்று பிரதிவாதிகள்தான் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களால் பார்க்கமுடியவில்லை என்றுசொன்னதால் எனது அப்பாவை சாமியார்காலனியில் உள்ள எனது வீட்டில் வைத்து பார்த்தேன். 27.1.2020 ல் நான் வேலைக்கு சென்றபோது எனது அப்பாவை 3 பிரதிவாதிகளும் தூக்கிசென்றதால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். எனது தந்தை விருப்பப்பட்டுதான் 3 பிரதிவாதிகளுடன் சென்றார் என்றாலும் என் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரை தூக்கி செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் காளியம்மாள் எங்கு வசிக்கிறார் என்றால் பிறவிபட்டி என்ற ஊரில் உள்ளார். நான் பிறந்த உடன் எனது தாயார் என்னை விட்டு விட்டு போய்விட்டார் என்றால் தெரியாது. எனது தந்தை ராஜம்மாளை திருமணம் செய்த காலத்தில் எனது தாயார் கருப்பணன் குமாரர் பாலகிருஷ்ணன் என்பவரை திருமணம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதற்கு பிறகும் எனது தாயார் பாலகிருஷ்ணனையும் விவாகரத்து செய்துவிட்டு செட்டுடையான்பட்டி கிராமத்தை சேர்ந்த மாயிருளன் குமாரர் கிருஷ்ணசாமி என்பவரை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. அதனால் சிறுவயது முதலே என்னை வளர்த்துவந்ததே ராஜம்மாள் என்றால் சரியல்ல. நான் எனது தாயார் காளியம்மாளுடன் பிறவிபட்டியில் வசித்து வந்தேனா என்றால் எனது பாட்டியுடன் கூட்டு குடும்பமாக சுந்தரகுடும்பன்பட்டியில் வசித்து வந்தேன். ஆரம்ப காலம் முதல் நான் எனது தாயாருடன் வசிக்கவில்லை என்றாலும் எனது பாட்டியுடன் தான் வசித்து

வந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் 4ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை விடுதியில் தங்கிபடித்தேன். அப்போது என்னை எனது பாட்டியும் எனது அம்மாவும் பார்க்க வந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வாக்காளர் கணக்கெடுப்பு ஆவணம் என்றால் சரிதான். அதில் எனது தகப்பனாரின் பெயர் பூல்ராஜ், தாயாரின் பெயர் ராஜம்மாள் என்றும் குறிப்பிட்டுள்ளது என்றால் எனது தாயார் காளியம்மாள் தான். ஆனால் தவறாக ராஜம்மாள் என்று எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணம் 23.9.1994 தேதியிட்ட ஆவணம் ஆகும். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். என் தாயார் பெயர் வாக்காளர் கணக்கெடுப்பு பட்டியலில் தவறாக குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் இப்போது தான் தெரியவந்தது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது பெயர் ராஜாராம், வயது 21 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். காளியம்மாளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் தபசில் சொத்துக்களையும், எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களையும் அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் காளியம்மாளுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது தாயார் அவரது தாய் தகப்பனாருடன் இருந்ததால் எனது பெயரை குடும்ப அட்டையில் சேர்க்கவில்லை. எனது தாயார் காளியம்மாளின் குடும்ப அட்டை மற்றும் ஆதார் கார்டிலும் எனது தகப்பனாரின் பெயர் உள்ளது. அவ்வாறாக உள்ள குடும்ப அட்டை மற்றும் ஆதார் கார்டு வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அது அரசால் வழங்கப்பட்ட ஆவணம் ஆகும். எனது திருமண அழைப்பிதழிலும் எனது தாயார் காளியம்மாள் என்றுதான் உள்ளது. திருமண அழைப்பிதழை நான் மோசடியாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதிலும் ராஜம்மாள், ராமுத்தாய், ராமலட்சுமி ஆகியோர்கள் பெயர் உள்ளது. வா.சா.ஆ.13 அவணமான தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதை பொறுத்து யாருக்கு வேண்டுமானாலும் அவர் உரிமம் மாற்றம் செய்வதற்கு உரிமை உள்ளவர் ஆவார் என்றால் சுயநினைவு இல்லாது போது உரிமை மாற்றம் செய்ய முடியாது. தபசில் 2வது அயிட்ட சொத்து இன்றுவரை 2ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்பதால்

அந்த சொத்து குறித்து நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒருபோதும் எனது தந்தையை ஏமாற்றியோ, மோசடி செய்தோ எந்த காலத்திலும் கிரையமோ வேறு எந்த விதமான உரிமை மாற்றமோ செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பள்ளி கல்லூரி சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்தில் எனது உண்மையான தாயார் பெயர் ராஜம்மாள் என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.